இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 27-07-2023

# இந்தியாவைப் பார்த்தாலே பயமா?

Indian national developmental inclusive alliance என்று எப்போது பெயர் சூட்டினார்களோ அப்போதில் இருந்து INDIA – என்ற பெயரைக் கேட்டாலே பயப்படுகிறார் பிரதமர் நரேந்திர மோடி.

எதிர்க்கட்சிகளின் கூட்டணியின் 'இந்தியா' என்ற பெயர் குறித்து பேசியுள்ள பிரதமர் மோடி, "இந்தியன் முஜாஹிதீன், பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா – ஆகிய பெயர்களில் கூட 'இந்தியா' என்ற பெயர் உள்ளதாக கேலி செய்துள்ளார். நாடாளுமன்றத்தை முடக்கி வரும் எதிர்க் கட்சியினரை "திக்கற்றவர்கள்" (directionless) என்றும் அவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

பா.ஜ.க. எம்.பி.க்களின் கூட்டத்தில் பிரதமர் மோடி கலந்து கொண்டிருக்கிறார். அதில் அவர் பேசும்போது, "இதுநாள் வரையில் நான் இது போன்ற திக்கற்ற எதிர்க்கட்சியினரைப் பார்த்தது இல்லை. 'இந்தியா' என்ற பெயருக்காக அவர்கள் தங்களையே புகழ்ந்து கொள்கிறார்கள். கிழக்கிந்திய கம்பெனி, இந்தியன் முஜாஹிதீன், பாப்புலர் ஃப்ரண்ட் ஆஃப் இந்தியா போன்றவற்றிலும் இந்தியா என்ற பெயர் இருக்கிறது. அதனால், 'இந்தியா' என்ற பெயரால் ஒன்றும் ஆகிவிடாது. நாட்டின் பெயரை மட்டும் வைத்துக்கொண்டு மக்களைத் தவறாக வழிநடத்த முடியாது. தோல்வி, சோர்வு, நம்பிக்கையின்மை போன்றவற்றால் என்னை எதிர்ப்பது ஒன்றையே கொள்கையாக வைத்திருக்கிறார்கள். அவர்கள் எதிர்க்கட்சிகளாக மட்டுமே இருக்க முடிவு செய்திருப்பதையே அவர்களின் நடத்தை காட்டுகிறது. வரும் 2024 மக்களவைத் தேர்தலில் மக்களின் ஆதரவுடன் பா.ஜ.க. எளிதில் வெற்றி பெறும்" என்று பிரதமர் மோடி சொல்லி இருக்கிறார்.

இப்படி ஒரு பிரதமர் பேசுவது அவர் வகிக்கும் பதவிக்கு அழகல்ல. தொடர் தோல்விகளால் சோர்ந்து போய் நம்பிக்கையற்றவராகக் காணப்படுவது அவர் தானே தவிர வேறு யாருமல்ல. அவரது நம்பிக்கையின்மைதான் எதிர்க்கட்சிகளை இப்படிச் சொல்லி கொச்சைப் படுத்த வைக்கிறது.

**'இந்தியா' என்ற பெயரே அவர்களை ஆட்டம் காண வைத்திருக்கிறது. இப்படித் தான் 'ஒன்றியம்' என்று நம்முடைய முதலமைச்சர் சொல்வதைப் பார்த்து பயந்து போய்க் கிடந்தார்கள். நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் முதல் வரி, "இந்தியா அதாவது பாரதம் மாநிலங்களைக் கொண்ட ஓர் ஒன்றியமாய் இருக்கும்" என்றுதான் உள்ளது. "India that is bharat shall be a union of states" என்றுதான் இருக்கிறது. அதைத் தான் பயன்படுத்துகிறோமே தவிர, சட்டத்தில் இல்லாததை அல்ல. அப்போது, ஒன்றியம் என்ற சொல்லைப் பார்த்து பயப்பட்டார்கள். இப்போது 'இந்தியா' என்ற சொல்லைப் பார்த்து பயப்படுகிறார்கள். அரசியலமைப்புச் சட்டத்தைப் பார்த்தால் பயம். நாடாளுமன்றத்தைப் பார்த்தால் பயம். தேர்தலைப் பார்த்தால் பயம். பின்னர் மக்களைப் பார்த்தால் பயம்.**

'இந்தியா' என்பது கூட்டணிக்கு வைக்கப்பட்டுள்ள பெயரின் கூட்டுச் சேர்க்கை. அவ்வளவுதான். அதுவே பிரதமரை மிரட்டுகிறது. 'இந்தியா என்ற பெயர் தீவிரவாத அமைப்பின் பெயர்களில் இருக்கிறது' என்று சொல்ல நினைப்பதன் நோக்கம் என்ன? ஜனநாயக அரசியல் கட்சிகளையும் தீவிரவாத அமைப்புகளாகக் காட்ட நினைக்கிறார் பிரதமர். இந்தியா என்பது நாட்டின் பெயர். இடத்தின் பெயர். எல்லையின் பெயர். இந்த எல்லைக்குள் இயங்குபவர்கள் அந்தப் பெயரைப் பயன்படுத்துகிறார்கள். அதில் என்ன தவறு?

**யாரெல்லாம் இந்தியா என்ற பெயரை பயன்படுத்துகிறார்கள் என்று கண்டுபிடிப்பதும், விமர்சிப்பதும் தர்க்கம் அல்ல, அபத்தம். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்மாநில செயற்குழு உறுப்பினர் தோழர் கனகராஜ் சொல்லி இருக்கிறார்... "மிஸ்டர் மோடி அவர்களே! நாட்டை விட்டு தப்பி ஓடியவர்களான லலித் மோடி, நீரவ் மோடி ஆகியோர் பெயர்களில் கூட மோடி என்பது இருக்கிறதே!" என்று கேட்டு இருக்கிறார். இதற்கு என்ன பதில் சொல்ல முடியும்?**

**நரேந்திரர் என்று பெயர் வைத்திருப்பதால், அவர் விவேகானந்தர் ஆகிவிடுவாரா? பாரதி நடத்திய பத்திரிக்கைக்கு பெயர் 'இந்தியா'. அதற்காக எங்கள் கூட்டணிக் கட்சியின் பெயரில் தான் பாரதியாரே பத்திரிக்கை நடத்தினார் என்று சொல்லிக் கொள்ள முடியுமா?**

இந்தியாவின் புகழ்பெற்ற தத்துவாசிரியர் ராகுல்ஜி எனப்படும் ராகுல சாங்கிருதியாயன் எழுதினார்: "ஆரியர்களுடன் ரத்த உறவு கொண்ட அண்டைப் பிரதேசத்தைச் சேர்ந்த ஈரானியர் 'ச'வை 'ஹ' என உச்சரித்து வந்தனர். அதனால் 'சப்த சிந்து' பிரதேசத்தில் குடியேறி வாழ்ந்து கொண்டிருந்த தமது சகோதரர்களின் நாட்டை அவர்கள், 'ஹப்த ஹிந்து' என்று அழைத்து வந்தனர். அதன் சுருக்கமே 'ஹிந்த்' என்பது. அக்காலத்தில் மேற்கத்திய நாடுகளில் சிறந்து விளங்கிய கிரீஸ் நாட்டினர் 'ஹ'வை 'அ' என்று உச்சரித்து வந்தனர். அதனால் 'ஹிந்த்' என்பது 'இந்து', 'இந்த்' என ஆகிவிட்டது. இன்று எங்கும் நமது நாடு இதே பெயரில் தான் வழங்கப்படுகிறது" என்கிறார்.

உலகப் புகழ் பெற்ற வரலாற்றறிஞர் ஏ.எல்.பசாம் அவர்கள், "The wonder that was india" என்ற நூலை எழுதினார். 'வியத்தகு இந்தியா' என தமிழில் வெளியாகி உள்ளது. "சிந்து என்றுதான் அந்த நதியை இந்தியர்கள் சொன்னார்கள். பாரசீகர் மொழிமுதற் சகரத்தை ஒலிக்க இடர்பட்டமையால், அதனை இந்து என்றனர். பாரசீகத்தில் இருந்து இச்சொல் கிரீசுக்குச் செல்ல, அது இந்தியா முழுமைக்குமேயான பெயராக சுட்டப்பட்டது" என்று சொல்லி இருக்கிறார்.

**எனவே, 'இந்தியா' என்பது இடப்பெயர்தான். பிரதமர் பயப்படத் தேவையில்லை.**

**'தெனாலி' படத்தில் கமலுக்கு வரும் 'பயம்' போல. எல்லாம் 'பயமயம்'!**

**'காடு பயம், நாடு பயம், கூடு பயம், குளம் பயம், குளத்துக்குள்ள இருக்கும் நண்டு பயம், பூச்செண்டு பயம், செண்டுக்குள்ள இருக்கும் வண்டு பயம்....'**

## ஆந்திரா, தெலுங்கானாவிற்கு 'ரெட் அலார்ட்'

*ஐதராபாத், ஜூலை 27-*

*மத்திய மேற்கு வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதியானது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்ற நிலையில் தெற்கு ஒடிசா மற்றும் வடக்கு ஆந்திரா கடற்கரை ஒட்டிய வங்க கடலில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மையம் கொண்டுள்ளது. இதன் காரணமாக ஆந்திரா, தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் மிக கனமழை பெய்யக் கூடும் என இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.*

*தெலுங்கானாவில் பெய்து வரும் கனமழையின் காரணமாக அம்மாநில அரசு இரண்டு நாட்களுக்கு பள்ளி மற்றும் கல்லூரி என அனைத்து கல்வி நிறுவனங்களுக்கும் விடுமுறை அளித்துள்ளது.*

*இதன் காரணமாக ஆந்திரா, தெலுங்கானா, மராட்டியம், கோவா ஆகிய மாநிலங்களுக்கு அதீத கன மழைக்கான ரெட் அலார்ட் விடுக்கப்பட்டுள்ளது. அடுத்த 24 மணி நேரத்திற்கு அதீத மழை பெய்ய வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.*



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.07.2023) கார்கில் வெற்றி நாளையொட்டி, திருச்சிராப்பள்ளி கன்டோன்மெண்ட் பகுதியில், கார்கில் போரில் வீரமரணமடைந்த மேஜர் எம்.சரவணன் அவர்களின் நினைவகத்தில் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். உடன் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா, சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா. பிரதீப் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### திருச்சி, பெரிய மிளகுபாறையில் உள்ள நகர்ப்புற நலவாழ்வு மையம் –

# திருச்சிராப்பள்ளி அரசு பொது மருத்துவமனைக்கு நேரில் சென்று ஆய்வு!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மேற்கொண்டார்!

**திருச்சி, ஜூலை 27-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.07.2023) திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரிய மிளகுபாறையில் உள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்திற்கு நேரில் சென்று நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் மற்றும் மருந்து இருப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டார். தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி அரசு பொது மருத்துவமனைக்கு நேரில் சென்று மகப்பேறு பிரிவில் சிகிச்சை பெற்று வரும் தாய்மார்களிடம் சிகிச்சை விவரங்கள் குறித்து கேட்டறிந்து, மருத்துவமனை சமையற்கூடத்தில் நோயாளிகளுக்கு தயாரிக்கப்பட்டு வரும் உணவின் தரத்தினை ஆய்வு செய்தார்.**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.07.2023) திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரிய மிளகுபாறையில் உள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்திற்கு நேரில் சென்று நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் மற்றும் மருந்து இருப்புகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா. பிரதீப் குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடைந்ததையொட்டி 7.5.2022 அன்று சட்டப்பேரவை 110 விதியின் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், தமிழ்நாடு மக்களின் சுகாதாரத் தேவைகளை மென்மேலும் மேம்படுத்திடும் விதத்தில் தமிழ்நாட்டில் கிராமப்புரங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்களை இருப்பதைப் போல நகர்ப்புறங்களில் மக்கள் அரசுப்பொது மருத்துவமனையை நோக்கி வரும்போது மருத்துவமனைகளில் கூட்டம் அதிகமாகி வருகிறது. இந்நிலையை மாற்றி, ஒருங்கிணைந்த, தரமான மருத்துவ சேவைகளை மக்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வழங்கிடும் நோக்கில், பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 21 மாநகராட்சிகள் மற்றும் 63 நகராட்சிப் பகுதிகளில் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் புதிதாக அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி முதல்கட்டமாக, பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் 125 கோடி ரூபாய் செலவில் 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் முதலமைச்சர் அவர்களால் 6.6.2023 அன்று சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

**பதிவேடுகள் ஆய்வு!**

அவற்றில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரிய மிளகுபாறையில் அமைக்கப்பட்டுள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்திற்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று நேரில் சென்று, நலவாழ்வு மையத்தின் பதிவேடுகளை ஆய்வு செய்து, அங்குள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களிடம் நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் குறித்து கேட்டறிந்து, மருந்துகளின் இருப்பு குறித்து ஆய்வு செய்தார். பின்னர், அங்கு சிகிச்சை பெற்று வருபவர்களிடம் நலவாழ்வு மையத்தின் சிகிச்சை வசதிகள் குறித்து கேட்டறிந்தார்.

இந்நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் கர்ப்பகால மற்றும் பிரசவகால சேவைகள், சிசு மற்றும் குழந்தைகள் நல சேவைகள், குழந்தைகள் மற்றும் வளரிளம் பருவத்தினருக்கான சேவைகள், குடும்பநலம், கருத்தடை மற்றும் பேறுகால சேவைகள், தேசிய சுகாதாரத் திட்டங்களின் பொதுவான தொற்றுநோய்களுக்கான சிகிச்சைகள், வெளிநோயாளிகள் மற்றும் சிறு நோய்களுக்கு சிகிச்சைகள், தொற்றா நோய்களுக்கான சிகிச்சை அளித்தல், மனநோய்களைக் கண்டறிந்து சிகிச்சை அளித்தல், கண், காது, மூக்கு மற்றும் தொண்டை பிரச்சனைக்கு சிகிச்சை அளித்தல், பல் நோய்களுக்கான சிகிச்சை அளித்தல், முதியோருக்கு சிகிச்சை அளித்தல், விபத்து மற்றும் அவசர மருத்துவ சிகிச்சை போன்ற சிகிச்சை வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

நகர்ப்புற நலவாழ்வு மையத்தினை ஆய்வு செய்த பின்னர், திருச்சிராப்பள்ளியில் உள்ள 1832 படுக்கை வசதிகள் கொண்ட அரசு பொது மருத்துவமனைக்கு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று, அங்குள்ள மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களிடம் நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சை விவரங்கள் குறித்து கேட்டறிந்தார். பின்னர், மகப்பேறு பிரிவிற்கு சென்று அங்குள்ள தாய்மார்களிடம் சிகிச்சை விவரங்களையும், மருத்துவமனையில் தினந்தோறும் அளிக்கப்பட்டு வரும் உணவு சரியான நேரத்திற்கு வழங்கப்பட்டு வருகிறதா என்று கேட்டறிந்தார். தொடர்ந்து, மருத்துவமனையில் நோயாளிகளுக்கு உணவு தயாரிக்கும் கூடத்திற்கு நேரில் சென்று அங்கு தயாரிக்கப்பட்டு வரும் உணவினை சாப்பிட்டு பார்த்து, தரத்தினை ஆய்வு செய்தார். பின்னர், நோயாளிகளுக்கு தயாரிக்கப்படும் உணவுகளின் விவரங்கள் குறித்தும் கேட்டறிந்தார். இம்மருத்துவமனை மொத்தம் 1832 படுக்கை வசதிகள் கொண்டதாகும்.

இந்த ஆய்வுகளின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் மா.பிரதீப் குமார், திருச்சிராப்பள்ளி அரசு பொது மருத்துவமனை முதல்வர் டாக்டர் நேரு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் கீழ்

# மூன்று நாட்களில் 36 இலட்சம் விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன!

*சென்னை, ஜூலை, 27 -*

*பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தி, வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்ட விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாமை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 24.7.2023 அன்று தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் தொடங்கி வைத்தார். விண்ணப்பப் பதிவு முகாம்களை இரண்டு கட்டங்களாக நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*முதற்கட்டமாக 20,765 நியாய விலைக் கடைகளில் இருக்கும் குடும்ப அட்டைகளுக்கு 24.07.2023 முதல் 04.08.2023 வரை விண்ணப்பப் பதிவு முகாம்கள் நடைபெற்று வருகின்றன. நியாய விலைக் கடை பணியாளர்கள் ஒவ்வொரு வீடாக விண்ணப்பங்களையும், டோக்கன்களையும் விநியோகம் செய்து வருகின்றனர்.*

*முதற்கட்ட விண்ணப்பப் பதிவு முகாம்களில் முதல் மூன்று நாட்களில், 26.07.2023, மாலை 6.00 மணி வரை 36,06,974 விண்ணப்பங்கள் இணையதளம் வழி பெறப்பட்டுள்ளன. இந்த முகாம்களில் விண்ணப்பங்களைப் பதிவு செய்வதற்கு 34,350 தன்னார்வலர்கள் பணியாற்றி வருகின்றனர். ஒவ்வொரு நியாய விலைக் கடையிலும் இருக்கும் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப விண்ணப்பம் பதிவு செய்ய தன்னார்வலர்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனர். ஒவ்வொரு முகாமிலும் பயனாளிகளின் விண்ணப்பங்களைச் சரிபார்க்கவும் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கும் உதவி மையம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. ஒவ்வொரு உதவி மையத்திலும் ஒரு தன்னார்வலர் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கு உதவி செய்வார்.*

*மீதம் உள்ள 14,825 நியாய விலைக்கடைகளில் உள்ள குடும்ப அட்டைகளுக்கு இரண்டாம் கட்ட முகாம்கள் 05.08.2023 முதல் 16.08.2023 வரை நடைபெற உள்ளது. இதற்கான விண்ணப்பங்கள் மற்றும் டோக்கன் விநியோகம் முகாம் தொடங்குவதற்கு நான்கு நாட்கள் முன்னதாகத் தொடங்கும்.*

*அனைத்து முகாம்களிலும் பொதுமக்களுக்கு தேவைப்படும் அடிப்படை வசதிகளான இருக்கைகள், குடிநீர், கழிவறை வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. மேலும் மாற்றுத் திறனாளிகள் மற்றும் முதியோருக்கான சிறப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது.*

*இத்திட்டச்செயலாக்கம் குறித்து இன்று (26.07.2023) தலைமைச் செயலாளர் தலைமையில் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனான ஆய்வுக்கூட்டம் காணொலி காட்சி மூலம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், அரசு உயரதிகாரிகள் கலந்துக்கொண்டனர்.*